# கா

கூவல் - 1 ஆவணி - 2005



அன்பளிப்பு - 10/=

அனைத்து சாத்தியப்பாடுகளுக்குமான திறவுகோல்

கா

அனைத்து
சாத்தியப்பாடுகளுக்குமான
திறவுகோல்

ஆசிரியர்குழு
ச. மணிசேகரன்
வி. கௌரிபாலன்
கிக்கோ
திசேரா

உங்கள் படைப்புகளுக்கும்,
கருத்துகளுக்குமான
தொடர்பு
ஆசிரியர் "கா"
நவரட்னராஜா
வித்தியாலய வீதி
ஆரையம்பதி - 02
(இலங்கை)

அன்பளிப்பு சேரிடம்
ச. மணிசேகரன்
தபாலகம் ஆரையம்பதி
எனக்குறிப்பிடவும்,

கா. அனைத்து சாத்தியப் பாடுகளுக்குமான திறவு கோலாக வெளிவருகிறது.
புதிய உடைப்புகளுக்கும், புதிய வடிவங்களுக்கும் - உள்ளடக்கங்களுக்குமான முயற்சியாகவும் திகழும்.
சகலரையும் சென்றடைவதை நோக்கமாகக் கொள்ளினும் சாத்தியப்பாடான வரை முயற்சி தொடரும்.
காலத்தின் தேவை கருதி சில பதிவுகளையும் மேற்கொள்ளும்.
காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை.
"கா"வும் காத்திருந்தது போதுமென உங்கள் கரங்களில், தொடர்ந்தும் காலத்திற்கேற்ப வெளிவரும்.
"கா"வின் அழைப்புக்களுக்கு நீங்களும் செவிமடுப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன்.

ஆசிரியர் குழு

## அலசல் - 1

**பூச்சியத்தார்**

நான் முற்று முழுதான தமிழ் நிகழ்ச்சிகளைக் கொண்ட தொலைக்காட்சி நிலையமொன்றை ஆரம்பிக்கப் போகிறேன்.

உங்களின் அறிவை மழுங்கச் செய்வதும், வாசிப்பு பழக்கத்தை நிறுத்தி விடுவதும் எனது நோக்கம்.

அச்சேவை இருபத்து நான்கு மணிநேரமும் இடம்பெறும்.
நீங்கள் வேலையற்று சோம்பறித்தனமாய் கதிரைகளில் அல்லது நிலத்தில் குந்தி இருக்க வேண்டும்.

அதற்காக இந்தியத் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப் போகிறேன்.

உள்ளூர் கலைஞர்களை இல்லத்தாக்கி, அவர்களைப் புதைத்துவிட வேண்டும்.
நம்நாட்டுக் கலைபற்றி யாரும் பேசக்கூடாது.

தினமும் மூன்று படங்களும் எட்டு நாடகங்களும், பாடல் காட்சிகளின் தொகுப்பும், நகைச்சுவையும் இடம்பெறும்.

பாடசாலையையும், வேலைத்தளங்களையும் நினையாமல் தொலைக்காட்சியை மட்டும் வைத்து வாழமுடியும். விருந்தினர்கள் வரமாட்டார்கள் வந்தாலும் உடனேயே சென்று விடுவார்கள் (தேனீர் செலவு மிச்சம்)
சமையல் குறிப்புகளும் உண்டு.
கொழுப்பைக் கூட்டி இரத்த அழுத்தத்தை மட்டுமன்றி புதுவித நோய்களையும் உண்டு பண்ணி விடவேண்டும்.
பெண்களின் வீர ஆவேசத்தையும், பெருமையையும் காட்டும் நாடகங்களை போடுவேன்.

அதில் மட்டுமாவது அவர்களை சுதந்திரத்துடன் விட்டு வைப்போம்.

எல்லா நாடகங்களையும் பழிவாங்கலை கொண்டதாக தெரிவு செய்வேன்.

அப்படியாவது உங்களை வக்கிர உணர்வுள்ளவர்களாக மாற்றுவதற்கு முயற்சிக்கின்றேன்.

ஒவ்வொரு நாடகத்திலும் குறைந்தது 10 நிமிட சோகக்காட்சி இடம் பெறும்.
உங்கள் கண்களை துப்பரவாக வைத்துக் கொள்வதற்காக,


நாடகத்தின் ஒவ்வொரு நாளின் நிறைவும் எதிர்பார்ப்புடன் முடிக்கப்படும் நாளையும் - மறுதினமும் தொடர்ந்து பார்க்க வைப்பதற்காக.


இரவு பத்துமணிக்கு மேல் வயது வந்தவர்களுக்கான நிகழ்ச்சி ஒளிபரப்பாகும்.

அப்போது குழந்தைகள் தூங்கிவிடும் என்பதாலும் (விழித்திருந்தால் தூங்க வைக்கவும்) வீதியில் திரியும் பெண்களின் கொங்கைகளையும், பிருஷ்டங்களையும் பார்த்து ரசிக்க வேண்டும் என்பதற்காக, முடிந்தால் பாலியல் வல்லுறவை தூண்டிவிட வேண்டியதுதானே.

சவர்க்காத்துக்கு மட்டுமன்றி டயர், டியூப், காற்று எல்லாவற்றுக்கும் பெண்களை கொண்ட அரைகுறை ஆடையுடன் விளம்பரத்தை அறிமுகப்படுத்துவேன்.
பெண்களை போகப்பொருள் என்பதை மறக்காது இருக்க,

முடிந்தால் இந்நிறுவனத்துக்கு அனுமதி வழங்கும்படி சிபாரிசுக் கடிதம் ஒன்றை அனுப்புக.





# எச்சிமிடுவது விடுத்து....

வேறு ஏதாவது பேசு
எச்சமிடுவது விடுத்து
இப்போதாவது,
வேறு ஏதாவது பேசு !

குரூரப்பார்வையால் பலர்
கண் கோதியெடுத்து(ம்)
உன் எச்சத்தின்
வீரியம் பட்டிங்கு
எரியுண்டு போய்க்கிடக்கும்
எலும்புகளில்
நின்றாகிலும் - வேறு
ஏதாவது பேசு!

அறிவோம் ...!
உன் அலகுக் 'கூர்மை'
பற்றியும் அது
சதைகிழித்து
உணவாக்கும் பாலகர்
பற்றியும்.... மற்றுமுன்...
அமைதி யாசிப்பும்
அறிவோமென்பதால்
வேறு ஏதாவது பேசு.

இப்போதாவது !....
புறாக்கள் பற்றி
பேசிக்கொண்டே வடக்காயும்
சிறியவர் மீதும்
எச்சமிடுவது விடுத்து
வேறு ஏதாவது பேசு !

உன் எச்சத்தால்
தூர்த்துப் போய்க்கிடக்கும்
எண்ணெய் கிணறுகள்
மீண்டுமாய்.......
உயிர்த்து வந்து
தலைப் பின்னால்
தடவலாம்எனின்
அதுவரையிலுமாவது
எச்சமிடுவது விடுத்து
வேறு ஏதாவது பேசு !

- அம்பலத்தாடுவான் -

# விளையுங்காலம்

நான் மட்டும் அறிந்த
ஒரு மொழியுடன்
தவித்தேன்
அதே மொழியை அறிந்த
ஒரே மனித ஜீவியாய்
நீ வந்தாய்
தவிர்க்கமுடியாதவர்கள்
நாம்.

வாசுதேவன்

3ภ

# சி. வி. வேலுப்பிள்ளையின் தேயிலைத் தோட்டத்திலே

ச. மணிசேகரன்



மலையக மக்களின் துன்ப வாழ்வியலை முழுவதும் மிக அழகாக இன்றுவரை எந்த கவிதைத் தொகுப்புக்களும் புலப்படுத்தாத வகையில் மிகத் துல்லியமாக படம் பிடித்துக் காட்டும் ஒரு கவிதைத் தொகுப்பே சி.வி. வேலுப்பிள்ளையின் தேயிலைத் தோட்டத்திலே ஆகும்.

சி.வி. ஆங்கிலக்காலத்தில் எழுதி, அதனை சக்தி அ. பாலையா தமிழில் மொழிபெயர்த்து 1969இல் செய்தி பத்திரிகை வெளியீடாக வந்த நீள் கவிதையைச் கொண்டது இத் தொகுப்பாகும்.

இக்கவிதைத் தொகுப்பு இந்தியாவிலிருந்து மலையக மக்களின் வருகை, இன்றுவரை அவர்களுக்கு நிலம் சொந்தமில்லாமை, முன்னோர்களின் முயற்சியும் மற்றும் உணர்வும், இம்மண்ணிற்காக சிந்தி உழைத்த இம்மக்களை நினைப்பவர் இல்லை. உறவுகளை விட்டுப்பிரிந்து வந்தமை, தேயிலை அடியில் தங்கம் உண்டென ஏமாந்த ஏமாளித்தனம், பாட்டி, தாய், கன்னி, பேரப்பிள்ளை என அனைவரும் கொழுந்துபறித்தல், அதன் தொழில் முறைமை, பெண்கள் படும் துன்பம், எதிர் நோக்கும் பிரச்சினைகள், முற்றிய கொழுந்துகளை

பறித்தமைக்காக வாங்கும் ஏச்சுக்களும், வசவுகளும். தொழில் நேர்மை தொழில் சிறப்பு, இவர்களின் உழைப்பும், வியர்வையும் யாரோ சிலருக்கு சுவர்க்க இன்பமாக போக நிரந்தர கடனாாளியாகவும் அதேவேளை கூலிகளாகவும் வீதிகளையும் கட்டிடங்களையும் அமைந்தவர்கள் வாழ்கிறார்கள்.

மரங்களை நட்டவர்கள் இன்று இல்லை. ஆனால் யாரோ மரங்களை அறுத்து பணம் பண்ணுகின்றமை, வீட்டுப்பிரச்சனை, தமிழ் மக்கள் என்பதற்காக அவர்கள் படும் துன்பம் என்று ஒட்டுமொத்தமாக தீர்க்க தரிசனத்துடன் மலையக மக்களின் வாழ்வியலை கூறுகிறார். சி.வி

இத்தொகுப்பிலுள்ள இறுதிக்கவிதைகள் கவிஞரது வெளிக்குமுறல்களாகவும், எதிர்காலத்தை நம்பிக்கையோடும் தீரத்தோடும் நோக்குபவையாகவும், தூங்கிக் கொண்டிருக்கும் தொழிலாளர்களை தட்டியெழுப்பி அவர்களுடன் தாமும் ஒருவராக நின்று எழுச்சி பாட முனைவதாக அமைந்துள்ளது கவனிக்கத்தக்கது என்கிறார் கலாநிதி அருணாசலம்.

இத்தொகுப்பிலுள்ள கவிதைகளில் சி.வியின் முகம் வேறுபாடானது அது மலையகமக்கள் படித்து பயன்பெற வேண்டியதன்று இம்மக்கள் குறித்து பிறரறிய வேண்டியவை என்பதுடன் அதன் பிறப்பும் தனித்துவமும் பிற கவிஞர்களில் செல்வாக்கை ஏற்படுத்துவதாகின்றது என்கிறார் கவிஞர் சு. முரளிதரன்.

இவ்வகையில் மலையகம் ஈன்ற மிகச்சிறந்த கவிஞன் சி.வி என்பதும் அவரின் கவிதை தமிழில் சக்தி அ.பாலையாவினூடாக வரும் போது அதன் சிறப்பை உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருப்பதுடன் நாற்பது ஆண்டுகள் கழிந்தும் இன்றைய சூழலிலும் மறு பிரசுரம் பெறவேண்டிய தேவை உள்ளதும் மனம் கொள்ளத்தக்கது.

# வயிரவன் சடங்கு

ராஜாத்தி



நான் வயிரவன் சடங்குக்கு போய் கிட்டத்தட்ட பத்துவருஷத்துக்கு மேலாயிருக்கும்.

அந்த நாளையிலயெண்டா சாமத்திலதான் சடங்கு. இப்ப அப்படியில்லை. மாலபட்ட உடனே சடங்கு தொடங்குது.

பந்தல வடிவாத்தான் சோடிச்சிருக்காங்க பந்தல்காலுக்கெல்லாம் சீலசுத்தி தென்னங்குருத்தால அலங்கரிச்சி, தென்னம்பாளையும் விரிச்சி வைச்சி, கார்த்திகப் பூவும், நெருப்புவாகப் பூவும் கட்டித்தூக்கி அப்பிடி பின்னியிருக்காங்க எங்கதான் இந்த தென்னங்குருத்துச் சோடினையை கண்டுபிடிச்சாங்களோ தெரியா.வயிரவனிலயும் எத்தன வயிரவன் சுடல வயிரவன்.. நரசிங்க வயிரவன்... வீரபத்திரன்.... வதனமார்... பொல்லுக்காரன்... பந்தல்காரன்... பேர்தானே வித்தியாசம் தவிர தோற்றமும் செயலும் ஒன்றுதான்.

ஒரு கையில சூலம், மறுகையில் கத்தி, வாய்க்கு வெளியால நீண்ட பல். அதுகளுக்கிடையால கோரமாத்தொங்கும் நாக்கு, முட்டக் கண்கள் பென்னம் பெரிய காலும் - கையும். கோவணமும் கட்டாம நிர்வாணமாய் ஒரு கோர வடிவம்தான் வயிரவன்.

கோரமாயிருந்தாலும் நல்லவர் என்றுதான் அம்மா சொல்லுவா. ஆனா எனக்கென்னமோ அம்மாட கதையில நம்பிக்கையில்லை.

வேலியர்தார் சடங்கு வைக்கிறார். பெரிய பெரிய ரொட்டி, கள்ளுப்போத்தல் சாராயப் போத்தல், மொந்தன் வாழைப்பழம் ஸ்பெஷலா கஞ்சாரொட்டி எண்டு பந்தல் நிறைஞ்சிருக்கு, ஆனா பங்கு வாங்க இளசுகள காணள்ள அஞ்சாறு விடலயள்தான் நிக்குதுகள்.

முதலெண்டா எங்க சடங்கு நடந்தாலும் இளம் பெடிகள் நிறைஞ்சிருக்கும். முகத்த சனத்துக்கு காட்டாம முக்காடு போட்டு மறைச்சிக்கொண்டுதான் பங்கு வாங்கிறது. அப்பதான் ஒண்டுக்கு ரெண்டு பங்கு வாங்கலாம்... இப்ப முக்காடெண்டாலே பயமாயிருக்கு.

பங்கொண்டா அதில ஒரு ரொட்டித்துண்டு மொந்தன் வாழைப்பழம்... கரும்பொருதுண்டு, ரெண்டு மூணு பூவெண்டிருக்கும்.

வயிரவன் சடங்குக்கும் இளம்பெடிகள் போறது பங்கு வகிக்கிறதெல்லாம் இப்ப நல்லா குறைஞ்சி போச்சு.

எங்கட வீட்டிலையும் ஒரு வயிரவன் பந்தலிருக்கு. சுடல வயிரவனாம். ஆதியிலிருந்து வரிசத்துக்கொருக்கா சடங்கு வைக்கிறது. வழக்கம். படிப்படியாக இந்தப் பழக்கம் குறைஞ்சி வெள்ளிக்கிழமை இரவுல விளக்கு கொழுத்தி வைக்கிறதோட நிண்டு போச்சு.

எங்கட மூத்தக்கா ஒரு பக்திப்பழம் வெள்ளிக்கிழமை மாலபட்டா போதும் பம்பரமா சுத்துவா குறைஞ்சது ரெண்டு மணித்தியாலமெண்டாலும் வேணும் வயிரவன்ட பணிவிட முடிக்க.

அண்டைக்கும் ஒரு வெள்ளிக்கிழமை மாலபட்டநேரம் ஒரு அலுவலா நேரத்தோட சாப்பிட்டுப்போட்டு போவமெண்டு காத்து நிண்டன். கிட்டத்தட்ட ரெண்டு மணித்தியாலமாகியும் அக்காவரல்ல சாப்பாட்டப் பார்த்தன், அதுவும் ரெடியில்ல கண்டபடி ஏசிப்போட்டன். ''வயிரவனும் மண்ணாங்கட்டியும் விழுந்து விழுந்து கும்பிட்டும் என்னத்த தந்தவர். நான் சாப்பிட ஒரு முட்டையும் பொரிக்காம அப்படி என்ன கும்பிடு'' என ஏசின கோபத்தில் சாப்பிடாம போய்ப்படுத்திட்டன்.

வெக்கையெண்டு வெளியில படுத்தனான். நல்லா நித்திர வரக்குள்ள வெள்ள வேட்டியோட ஒரு ஆள் வெள்ள சீல உடுத்த பொம்பிளையும் கூட்டிக்கொண்டு என்ன நெருங்கி வாறார். அவங்க, கிட்ட வரவர எனக்கு பயம் வருது. அக்கா அக்கா எண்டு கத்தறன் சத்தம் வெளியில வரல்ல. அந்த ரெண்டு பேரும் எனக்கு கிட்ட வந்து எண்ட களுத்த நெரிக்கிறாங்கள் திமிறி திமிறி கத்துறன் அப்பவும் சத்தம் வெளியில வரல்ல. திரும்ப திரும்ப களுத்த நெரிக்கிறாங்கள், நான் கத்துறன் அவங்களுக்கு சிரிப்பு. நான் அவதிப்பட்டத பார்த்து ரசித்துப்போட்டு விட்டிட்டுப் பொயிற்றாங்கள். பாயையும் தலையணையையும் வாரிச்சுருட்டிக்கொண்டு எழும்பின நான் காலையில பார்த்தா வீட்டுக்குள்ள படுக்கின்றன்.

கதை ஊருக்குள்ள புகைஞ்சிட்டுது. நான் வெள்ளிக்கிழமை முட்டை பொரிக்க சொன்னதாலதான் சுடல வயிரவன் வந்து எண்ட கழுத்தை நெரிச்சுப் போட்டுதெண்டு. கொஞ்சநாள் ஊருக்க இதுதான் கத.

எங்கட வீடு ஒரு நாற்சந்திக்கு கிட்டத்திலதான் இருக்கிறது. அம்மா அடிக்கடி சொல்லுவா.. "வயிரவன் நல்லவர் ஒவ்வொரு நாளும் நடுச்சாமம் பன்னிரெண்டு மணிக்கு வெள்ளைக்குதிரையில ஊர்க்காவலுக்கு வாறவர். நாற்சந்தியில் ஒரு தரம் நிண்டு போவார். அந்த நேரம் அவரிர காலப்பிடிச்சி என்ன வரம் கேட்டாலும் தருவார்" எண்டு.

அப்பா செத்த உடனே நான் நினைச்சன் எப்படியெண்டாலும் வயிரவண்ட காலப்பிடிச்சி செத்துப்போன அப்பாவ திருப்பிக் கேக்கோணுமெண்டு ஆனா நடுச்சாமத்திலதான் நல்லா நித்திர வரும். பயம் ஒரு பக்கம் கேட்டுப்பார்க்க வாய்ப்பே கிடைக்கல்ல. எனக்கதில கவலையுமில்ல ஏனெண்டா எனக்கு முதலும் வயிரவனிட்ட வரம் பெற்று செத்துப்போன எந்த அப்பாவையும் திருப்பி பெற்றதா கத கூட இல்ல.

ஆன இப்ப சந்திக்கு சந்தி வயிரவன் பந்தல்தான். அப்பாவ அண்ணனை.. தம்பிய... மனம் கூசாம குழந்தைகள.. நரபலி எடுக்கிற கததான் அடிக்கடி.

இப்ப நரபலியில்லாம சடங்கு நடக்கிறதில்ல. வயிரவனுகள் நினைச்சநேரம் நினைச்ச இடத்தில நடக்கும். சடங்கு நடந்த இடத்தையெல்லாம் சங்காரம் பண்ணி நரபலி எடுத்த பிறகுதான் வயிரவனுக்கு ஆவேசம் அடங்கும்.

நடுச்சாமம் பன்னிரெண்டு மணிக்கு வெள்ளக் குதிரையில மட்டும் ஊர்க்காவலுக்கு வயிரவன் வாறதெண்டதெல்லாம் பொய்க்கத இப்ப கறுப்பு. சிவப்பு, பச்சையெண்டு எல்லாக்குதிரையிலயும் காவல்தான். கன்னி வேட்டைக்குப் போறதெண்டா கால் நடையிலதான்.

அண்டைக்குமொரு வயிரவன் சடங்கு சாமந்தியாத்தில கந்தப்பு போடியின்ர வாடியிலதான் சடங்கு நடக்குது. குஞ்சு குமர் இளசு பெரிசெண்டு பங்கு வாங்கப் போனதுகள்

சடங்கு தொடங்க நடுச்சாமமாகிப் பொயிற்று சடங்கு தொடங்கி கொஞ்ச நேரத்தில அண்டை அயலெல்லாம் பயங்கர வெடிச்சத்தம். நாலாபக்கமும் வயிரவனுகள் ஆவேசத்தோட ஒரு கையில சூலம் மறுகையில கத்தி பொல்லெண்ட.... பயங்கரமா வந்தாங்கள்.

சடங்குக்கு வந்த சனமெல்லாம் பயந்து சிதறியோடி தடுத்து நிறுத்திப் போட்டாங்கள். சனத்துக்கு என்னசெய்யிறதெண்டு தெரியல்ல வாய்க்கு வந்தபடி வயிரவன் காவியத்த பாடத் தொடங்குதுகள். தொண்ட காஞ்சி போகும் வரையும் பாடிச்சுதுகள் வயிரவனுக்கு அடங்கல்ல சன்னதம் கொண்டுட்டாங்கள்.

இளசு, பெரிசு எண்டு பாக்காம ஆம்பிளைகளையெல்லாம் ஒரு பக்கம் இளுத்தெடுத்து கண்ணக் கட்டிப்போட்டு பார்த்திருந்த குஞ்சு குமருகளெல்லாம் வயது வித்தியாசம் பார்க்காம சாட்டையால அடிச்சாங்க.

வயிரவன் பந்தல் இருந்த இடம் தெரியல்ல. பேயாடி மிரிச்சுப் போட்டாங்க.

பந்தலில் இருந்த கள்ளு, சாராயம் எல்லாத்தையும் குடிச்சாங்க கஞ்சாரொட்டி பல்லிடுக்கால் போகக்குள்ள ஆவேசமா எழும்பி கண்ணக் கட்டியிருந்த எல்லாருக்கும் கண்மண் தெரியாம அடிச்சாங்க நெஞ்சில ஏறி மிரிச்சாங்க.

பொண்டுகளெல்லாம் கதறி கதறி அழுதாங்க கையெடுத்து கும்பிட்டு காலப்பிடிச்சி கெஞ்சினாங்க... ஆவேசம் கொண்டவனுகளுக்கு அது பெரிசா தெரியல்ல.கதறலொலி காட்டிருளக் கிழித்து கண்ணக்கட்டியிருந்த எல்லாரையும் காட்டுப்பக்கமா இழுத்துப்போனாங்க.

பின்னுக்கு போன பெண்டுகளுக்கெல்லாம் அடிச்சாங்க க்தி கலங்கி ஓடும் வரை அடிச்சாங்க. இருள் சூழ்ந்த நேரம் ஒண்டும் தெரியல்ல.... இருட்டோட இருட்டா அந்தப் பெண்டுகளின்ர அப்பா, மகன், கணவன், தம்பி, அண்ணன் அழுகை சத்தம் மட்டும்தான் கேட்டது.

திசேரா

# உள்நோக்கல்

ச.தியாகசேகரன் எனும் இயற்பெயர் கொண்டவர். கபாலபதி, வெள்ளைத் தோல்வீரர்கள் எனும் இரு சிறுகதைத் தொகுதிகளின் உரித்தாளியிவர். ஈழத்தின் புதுவகையான எழுத்து முறைமையைக் கொண்ட முக்கியமான படைப்பாளி. இவரின் ஒவ்வொரு சிறு கதைக்குமான களமும், வடிவமும் விரிந்து கொண்டே செல்லும், இவரின்தனித்துவமே. அதுதான்.



வழைமையான பேட்டி காணல் முறையில் இருந்து விலகி அவரே தனது படைப்புகள் பற்றி கூறிய கருத்துக்கள்.

அறிமுகம்

வாழ்வுதிணித்திருத்த தனிமையும், காலம் காட்டிய குரூரமும் என்னுள் புகைந்து கொண்டே இருந்தது. இயலாமை ஏற்படுத்திய விரக்தி, சாதிக்க வேண்டும் என்றவெறி, நிர்ப்பந்திக்கப்பட்ட தனிமை தேவைப்பாடாய் போனமை. இவைகளால் எழுந்த வாசிப்பு ஆர்வமும் - சிந்தனையும் என்னுள் இருந்த விரக்தியை எழுதத்தூண்டியது.

## எழுத்து

பிரபலமாக வேண்டும் என்ற ஆரம்பகால உணர்வு வித்தியாசமாய் செய்யவேண்டுமென்ற தேடல். குறைந்த வாசிப்பில் நிறைய எழுதத் தூண்டியது. ஆரம்ப கவிதைமுயற்சி "போலச்செய்தல்" தன்மையை காட்டுகின்றது. என எனக்கு உணர்த்தப்பட்டதால் கவிதை தன்மையுடன் சிறுகதைக்குள் நுழைதல் நிகழ்கிறது. (21 வயதில்) பொருளாதார நிலைமை காலத்தை நகர்த்தியதால் 26 வயதிலேயே "கபாலபதி"யை கொண்டுவரமுடிந்தது.

என்னதான் எழுதினாலும் எனது எல்லைகளையும், சிந்தனையையும் தாண்டி கதைகள் தன்பாட்டிலேயே என்னைக் சென்றுகொண்டு இருக்கின்றது. என் நிலைப்பாட்டுள் கொண்டுவரும் முயற்சியில் இறங்கி கோணலாய் போனவை அதிகம் என்பதால் அதை அதன் பாட்டில் விடுவதே சரியாகப்பட்டது.

எதுவும் தராத திருப்தியை எழுத்துக்களும், வாசிப்பும் தருகின்றது. கபாலபதி - நம்தேசத்தின் சர்வதிகாரி, வெள்ளத்தோல் வீரர்கள் - சர்வதேசத்தின் சர்வாதிகாரிகள், சிந்தனைகளின் ஆக்கிரமிப்பாளனும் கூட, இரண்டும் பூரண திருப்தியை தராத தொகுப்புக்களே (என்னளவில்) இதனாலேயே ஒவ்வொரு நாளிலும் புதிதாய் பிறக்க, எழுத நினைக்கின்றேன்.

என்னுள் எப்போதும் கோபம் ஆத்திரம் இருந்தது, இருக்கின்றது. போராட துணிந்த போது கையில் பேனை கிடைத்தது. என் வீட்டுள் கிடந்த புத்தகங்கள் வழிகாட்டின. (சகோதரனின்) நடந்து கொண்டே இருப்பேன், என்மூளை இயங்கும் வரை போராடிக்கொண்டே இருப்பேன். எழுதுகோல் இருக்கும் வரை (குறைந்தது வலது கையில் ஒரு விரலாவது இருக்கும் வரை) சிந்தனை செயற்படும் வரை கூட.

பலவேளைகளில் தோணுகிறது எழுதுவதால் தான் வாழ்கிறேனோ என்று, கனவுகளைப் போல நனவுள்படரும் மேகம் சிலவேளைகளில் பயம் காட்டுகிறது. எழுதுவதால்தான் சாகப்போகிறாய் என்று. எங்கு எதில்தான் இல்லை, வாழ்வு - மரணப் போராட்டம். மரணத்துடன் விளையாடுவதும், அதை நேசிப்பதும் - எழுதுவதும் அலாதியான இன்பத்தை தருகிறது.

அதனால் அதைகுறைத்து முழு மூச்சிலும் நுழையக் கூடியதாக தொடராய் சொல்வது.உணர்வு - சிந்தனை ஒருங்கு சேர செயற்பட இலகுவான வழியாகப்பட்டது. மற்றையது எனக்கான ஒரு மொழி நடை தேவைப்பட்டது. அது இப்போது பழையதாகி விட்டதாக படுவதால் புதியதாய் ஒன்று தேவை.

மற்றையபடி ஒவ்வொரு கதைக்கும் பல கிளைக்கதைகள் உண்டு. வாசிப்பவரை சார்ந்து அது இன்னமுமொரு தளத்துக்கு கொண்டு செல்லவேண்டும். என்ற அடிப்படை கருத்து என்னுள் உண்டு. வெறும் பொழுது போக்காகவன்றி உள்ளுணர்வில் சிந்தனையில் சில அதிர்வுகளை உண்டுபண்ண வேண்டும்.

வெள்ளைத்தோல் வீரர்கள் - ஆக்கிரமிப்பாளர்கள் நில,
மொழி, சிந்தனை, மத .... சகலவற்றக்குமான

**எதிர்வினைபற்றி .....**

விளங்கவில்லை, புரியவில்லை. யாருடைய குறைபாடு சிந்தித்தேன், சிந்திக்கின்றேன். ஆனால் யாரும் விளங்கிக்கொள்ள கூடாது. என்பதற்காக எழுதுவதில்லை. ஒருபடைப்பு யாருக்குமே புரியப்படாமல் இருப்பதில்லை. எல்லோருக்குமே புரிய "பாட்டி வடைசுட்ட" கதை தான் சொல்லவேண்டும். இது தர்க்கமானாலும் எங்கோ ஒரு நியாயம் இருப்பதாய்ப்படுகின்றது.

நாம் போகவேண்டிய தூரம் அதிகமிருப்பதாக படுகிறது. வேகமாகவும் செல்ல வேண்டும். அடம்பிடிக்கும் குழந்தையையும் இழுத்துச் செல்ல வேண்டும்.


இன்னமும் சந்தேகம் நீள்கிறது. எதையும் கேள்விக்குட்படுத்துவது இயல்பு, சிறுபிள்ளை முதல்(அப்பா சலித்துக் கொண்ட, வாயை முடிய சந்தர்ப்பங்கள் பல) இலக்கியம் மக்களைச் சென்றடையவேண்டும்.

யார் மக்கள் ?
எழுத்தாகவா ? செயற்பாடாகவா ?
கதைகளை துண்டுபிரசுரமாக்கி வழங்க வேண்டுமா ?
அல்லது
அவர்கள் முன்சென்று கதைகளை கூற வேண்டுமா ?
இலக்கியம் என்பது பிரசங்கமா ?
படைப்புகள் வெறும் பொழுது போக்குக்கானதா ?
சிந்திக்கச் செய்ய வேண்டிய அவசிய மில்லையா ?
வாசிப்பில் மேலோட்டமான வாசிப்புக்குத் தான் இலக்கியமா ? கருத்தூன்றி
வாசித்தலுக்கு இல்லையா ?

இவற்றைப்போல் இன்னும் பல .....
ஆனால் ஒன்று இயந்திர வாழ்க்கை எங்களை சோம்பறிகளாக்கி விட்டதாய் படுகிறது. அறிவு மழுங்கடிக்கச் செய்யப்பட்டு விட்டன.

(என்னை வளர்த்துவிட்டதும், துணைநிற்பதும் பலர், நினைத்துக் கொள்கின்றேன்.)

# பொத்தக சாரல்



## நந்திக் கொடி

வரலாற்றுக் குறுநாவல்
ஆரணியம்
புதிய கல்முனை வீதி,
நாவற்குடா, மட்டக்களப்பு.

வாகரை வாணனின் நந்திக் கொடி 58 பக்கங்களில் 16 அத்தியாயங்களைக் கொண்டுள்ள ஒரு குறுநாவல். இதுதான் மட்டக்களப்பு மண்ணிலிருந்து வெளிவரும் முதல் வரலாற்று நாவல் என்கிறார் ஆசிரியர். அவ்வாறாயின் மட்டக்களப்பின் முதல் நாவலாக கொள்ளப்படும் அரங்க நாயகி (1934) வெளி வந்ததிலிருந்து ஒரு வரலாற்று நாவல் வெளிவர ஏறக்குறைய எழுவது வருடங்கள் செல்ல வேண்டி இருந்துள்ளது. என்பதினூடாக மட்டக்களப்பின் நாவல் வளர்ச்சியை அனுமானிக்கலாம்.

இக்குறுநாவல் ஆற்றொழுக்கான வசன நடை, சிறப்பான எளிய வர்ணனைகள், மட்டக்களப்பின் வர்ணனைகள், மட்டக்களப்பு மக்களின் சமயநிலை என்பவைகளுடன் வரலாற்றுத் தகவல்கள் நிறைந்து காணப்படுகின்றனவாயினும் வரலாற்றுத் தகவல்களுக்கு அப்பால் இன்றைய அரசியல் நிலைதான் ஆசிரியரின் மனதில் அழுத்தமாக நிற்பது போல் தெரிகிறது.

மீண்டும் வெளிநாட்டுப்படையெடுப்பா ?
ஈழம் போன்ற சிறிய நாடு எந்த ஒரு யுத்தத்தையும் தாங்காது என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணமாகும். மாகனுக்கு எதிரான இந்தப் போரில் பௌத்த சிங்கள இன உணர்வை தூண்டி விட்டு நடத்தும் அரசியலைக் கண்டு ஈழம் முழுவதும் பரவலாக வாழும் தமிழரும் கலிங்கரும் அச்சம் அடைகின்றனர்.

“ஒரு விடுதலைப் போரின் உயிர் நாடி ஒற்றுமைதான் எனவே வாயளவில் அன்றி செயல் அளவில் ஒற்றுமையை உருவாக்கி விட்டு இவ்விடுதலைப் போரை நானே முன்னின்று நடத்தப் போகின்றேன்.”

மேற்போந்த இவ்வரிகள் இக்குறுநாவலில் காணப்படும் சில எடுத்துக்காட்டுக்களாகும். இக்குறுநாவல் பொதுவாக அனைவரையும் வாசிக்கத் தூண்டும் தன்மையைக் கொண்டிருப்பினும் அடுத்த கட்ட வளர்ச்சியை நோக்கியதாக காணப்படவில்லையாயினும் ஒரு ஆரோக்கியமான கலந்துரையாடலுக்கு வழிவகுக்க கூடியது.

- ச.ம.சேகரன் -

## எங்கள் மரபும் தொன்மையும்

**தேவடியான்**

ஈழத்தமிழர்க்கென்று இசை, நாடக, ஓவிய மரபுகள் பண்பாட்டம்சத்துடன் இணைந்து இருந்தன. காலனித்துவ தாக்கமும், இந்திய பண்பாட்டம்சமும் இவற்றை இல்லாததாக்கி, தம்மை நிலை நிறுத்திக் கொள்ள முனைகின்றன. இக்கலைத்துவ ஆக்கிரமிப்பு இந்திய கலைகளை பிரதானப்படுத்தி நம் கலைமரபை மேவி நிற்கும் வேளை எமது பண்பாட்டம்சமும், வரலாற்றுத் தகவல்களும் திட்டமிட்ட முறையில் பேரினவாத சக்திகளினால் மாற்றி நிறுவப்பட்டுக் கொண்டு இருக்கின்றன.

பொலனறுவையில் சோழர் கலைமரபை பூதக்கண்ணாடி கொண்டு பார்க்க வேண்டிய நிலை (இன்னமும் சிறு காலத்தில் நுணுக்குக்காட்டி தேவை அதன் பின்னர் ....) கவனிப்பாரற்ற நிலையில் அழிவு பட விடப்பட்டுள்ள சிவாலயங்களையும், தமிழ்த்தூபிகளையும், புனரமைப்பதும், அதைப்பற்றி வரலாற்றியல் உண்மைகளையும் வெளிக்கொணரப் போவது யார்? எங்களுக்கான வரலாற்று நெருக்கடி இது.

வரலாற்றில் ஏற்பட்ட தில்லுமுல்லுகள், கலை இலக்கியம் வரை நீளுகின்றது. ஈழத்தமிழருக்கான இசைமரபு கர்நாடக சங்கீதமாகவும், நடனமரபு பரத நாட்டியமாகவுமே எம் சந்ததியினருக்கு திணிக்கப்பட்டுள்ளதை நாம் அறிந்து கொள்ளவேண்டும்.

இவைகளை மீறிய மக்கள் சார் அம்சமாக நாட்டார் பாடல், கதை மரபுகளும், கூத்து மரபுகளும், ஆரோக்கியமான ஓவியமரபும் எம்மிடம் உண்டு. இது இனங்காட்டப்படுவது மாத்திரமின்றி சரியான முறையில் கட்டமைக்கப்பட வேண்டும். இவற்றில் இருந்து கட்டியெழுப்பப்பட வேண்டிய அவசியமும் உள்ளது.

இதற்கான தேவைப்பாடு குறித்து முன்னர் பல தடவை கூக்குரலிடப்பட்டது.. ஆனால் அவை செயல்வாதமாக அமையாததால் அதே நிலையிலேயே இனமும் நிற்கின்றோம்.

பயணத்தில் கடக்கப்பட்ட இம்மரபுகளே எங்களின் வளமான நெடுந்தூரத்தை இனங்காட்டுவதுடன் உறுதியான அடித்தளத்தில் அடுத்த கட்ட நகர்வுகளை திட்டமிடுவதுடன், மேற்கொள்ளவும் முடியும்.

இது ஒரு சாத்தியமாகக் கூடிய செயல் வாதத்தினூடே முன்கொண்டு செல்லப்பட வேண்டும். இதற்கு தனியே உயர்கல்வி நிறுவனங்களை மட்டும் நம்பி இருப்பதனால் ஆகப்போவது ஒன்றுமில்லை.

"எப்போது பல்கலைக்கழகத்தில் பாடமாக நாடகம் வைக்கப்பட்டதோ அப்போது நாடகம் செத்துப் போய்விட்டது." என்ற நந்தினி சேவியரின்கூற்றுப்போல ஆகிவிடக் கூடாது.

(பார்க்க - கலைமுகம் - 15- பக்கம் 11)

இது ஒவ்வொருவரினதும் கடமை. மாற்றப்பட்ட வரலாற்றை மீட்க முடியாமல் இருக்கும் போது எங்கள் மரபையும் தொன்மையையும் இழக்கப் போகின்றோமா? இது பழமைக்குள் மீள்தலல்ல மரபை மீட்டல்.

நாகையும் சவுக்கும்
நட்டவரில்லை காண்
நன்னிலம் படைத்த
பொன்னுடல் இல்லை காண்.

சி.வி

புழுதிப் படுக்கையில்
புதைந்த என்மக்களைப்
போற்றும் இரங்கள்
புகல் மொழி இல்லை.

சி.வி

## கருத்து + குறிப்பு

ஈழத்தில் சாதிக்கட்டமைப்பு இறுக்கமாக காணப்பட்ட இடம் யாழ்ப்பாணம் என்பதும் சாதிக்கட்டமைப்பில் இறுக்கம் தளர்ச்சியாகக் காணப்பட்ட இடம் மட்டக்களப்பு என்பதும் யாவரும் அறிந்ததே. ஆனால் இறுக்கமாகக் காணப்பட்ட யாழ்மண்ணிலிருந்து சாதியின் சிறப்பு, வரலாறு பற்றியதான நூல்கள் எதுவும் இதுவரை வெளிவந்ததாக அறியமுடியவில்லை. மாறாக நெகிழ்வாக காணப்பட்ட மட்டக்களப்பு மண்ணில் இருந்து நான்கு நூல்கள் இதுவரை வெளிவந்துள்ளன. ஐந்தாவது நூல் அடுத்தமாதமளவில் வெளிவரும் அதனைத்தொடர்ந்து இன்னும் பலநூல்கள் வெளிவருவதற்கான அறிகுறிகளும் தென்படுகின்றன. இது வரலாற்றோட்டத்தில் ஒரு முரண்பாடான நிகழ்வாக தெரிகிறது.

கருத்து + தகவல் = ச.ம

மட்டக்களப்பின்
கல்வி வளர்ச்சியில்
ஆழத்தடம் பதித்து
பவளவிழாவைக் கொண்டாடும்
சிவானந்த வித்தியாலயத்தை
"கா"வும் வாழ்த்துகின்றது.

பொத்தக சாரலின்
குறிப்பிற்காக
படைப்பாளிகள் ஒருபிரதியை
மட்டும் அனுப்பவும்.
(ஆ.ர். குழு)

எந்தையோர் தம்மின்
எலும்புக் குவியல்கள்
எத்தனை எத்தனை
எத்தனை யாமோ!
சி.வி

## போர் வீரன் நாறிய நாள்

கலிபிறந்து
முப்பத்தினாலு சொச்சம் வயது கடந்த
போர்வீரன்
நரைத்தலைக்கிழவியின்
மந்திரக்கோலுக்கு
நாசமான வானா என்ன ?

ரெண்டாம் சாமத்தில்
சுகிர்த்தலுக்காய் மாய வித்தைக்காரி
அழைத்தபோது அச்சம் கொண்டு
ஆளைவிடுமென்று அகன்றான்
சிலமாதங்கள் வரை
பூதகணக் காரி
சூள் கொண்டு பேயாய் துரத்தி
ஜோனியை உடல் முழுது மொட்டி
தாகம் தீரக்க அலைந்தாள்

போர்வீரன் அசையவில்லை.
மாயாஜாலத்தை உருவாக்கி
போர் விரனின் நாமத்தை
காற்று மண்டலம் முழுதும்
நாசம் செய்தாள்
வன்மம் கொண்டு
நாலாதிசையும் எறிந்தாள்
அவன் அசைவில்லை

2

முன்னருமவள்
வெறிகொண்டு
நான்கைந்து குட்டிகளை சிதைத்தாய்
மெய்மை வெளிவருகின்றன, இப்போ
அதேகணம் அவள் முன் கதைப்பதற்கு
மாந்தரெல்லாம்
பயங்கொண்டு நடுங்கி
நா அடக்கி
பெட்டிப்பாம்பாய் சுருண்டனர்.
இப்போ
மூன்று பேய்கள் மாத்திரம்
போர்வீரன்
“மிஸ் யூஸ்” பண்ண நினைத்ததாய்
நரைத்தலைக்கிழவியுடன்
நாறிய பொழுதை கிழறுகின்றனர்.

**த. மலர்ச்செல்வன்**

கா

## புரிதல்

உன்னுடைய பார்வை ஒரு நெருப்பு,
மனப்பஞ்சை
என்ன விரைவாய் எரித்துவிட்டுப் போயிற்று.

உன்னுடை பார்வை ஒளிப்பிழம்பு,
எனது
கண்களுக்கு இப்போதுதான் சரியாக காட்டிற்று.

உன்னுடைய பார்வை உதயம்,
என்வாழ்வின்
முன்னிருளை
நொடியில் முழுதாய் விரட்டிற்று.

உன்னுடைய பார்வை ஒரு ஓடம்,
இன்பத்தை கண்ணீர்க்கடல் கடந்து காண உதவிற்று.

உன்னுடைய பார்வை உயிர் கொல்லி,
எனை விழுங்கி அணுவணுவாய் கொன்று புசிக்கிறது.

உன்னுடைய பார்வை...................
உவமைகளை அடுக்குகிறேன்.
ஒன்றும் திருப்தியானதாக மறுக்கிறது
உன் பார்வைநெஞ்சில் உசிப்பி விட்ட ஏக்கத்தை
உண்மையிலேயே
என்னுள் உரசிவைத்த உணர்வலையை
என்னாலே எழுதுவதற்கு ஏலாது
புரிகிறது.

*த. ஜெயசீலன்*